

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் மத்தியப் பகுதி சார்பில் பகுதிக் கழக புதிய அலுவலகம் காமராஜர் சாலையில் திறப்பு விழா மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் விழா மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில், கலாநிதி வீராசாமி எம்.பி, முன்னிலையில் பகுதிச் செயலாளர் ஏ.வி.ஆறுமுகம் ஏற்பாட்டில் ஆ.ராசா எம்.பி புதிய கட்டிடத்தினை திறந்து வைத்து இனிப்பு மற்றும் அறுசுவை உணவு வழங்கினார். இதில் வ.முத்துசாமி, மு.செல்வம், சாலை.டி.கணேசன், த.ச. கரிகாலச்சோழன், வி.ஜி.தினகரன், ஆர்.டி. ரமேஷ்குமார், துர்கா கோதண்டம், சஞ்சீவி ஸ்ரீதர், பி.செல்வராஜ், விஜயரங்கன், ஞானமூர்த்தி, என். கிருஷ்ணமூர்த்தி, மகேந்திரன், சுரேஷ் மற்றும் கழகத் தோழர்களும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் – ஒன்றியங்களின் விற்பனை மேலாளர்கள் –

# புதிதாக தெரிவு செய்யப்பட்ட தற்காலிக விற்பனை பிரதிநிதிகளுக்கான சிறப்பு பயிற்சி முகாம்!

## பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ.4-

மாமல்லபுரம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கூட்டரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் ஒன்றியங்களில் உள்ள விற்பனை மேலாளர்கள் மற்றும் புதிதாக தெரிவு செய்யப்பட்ட தற்காலிக விற்பனை பிரதிநிதிகளுக்கான சிறப்பு பயிற்சி முகாமை நேற்று (02.12.2025) பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தொடங்கிவைத்து செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடினார்.






பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தெரிவித்ததாவது :

ஆவினில் பலவேறு வழிகளில் அதற்கான வளர்ச்சிக்காக பணியாற்றிக்கொண்டு இருக்கிறோம். அதில் ஒரு பகுதியாக திறன் மேம்பாட்டு பயிற்சி ஏற்கெனவே களஅளவில் பணியாற்றுகின்ற அந்த சிறப்பு அதிகாரிகள் அத்தனை பேருக்கும் நல்ல பயிற்சியை கொடுத்து அவர்களை களத்தில் பணியாற்ற வைத்திருக்கின்றோம். *"Loan for all"* என்ற திட்டத்தின் மூலம் அனைத்து விவாசாயிகளுக்கும் கடன் வழங்கும் திட்டத்தை எங்களால் வெற்றிகரமாக நடத்த முடிகிறது. அதைப் போன்று தற்போது ஆவின் பொருட்களை தமிழகத்தின் அத்தனை பகுதிகளுக்கும் கொண்டு சேர்ப்பதற்காக *"Aavin Everywhere and Aavin for all"* என்கின்ற ஒரு முழக்கத்தோடு நாங்கள் எல்லா இடங்களில் ஆவின் பொருட்களை சந்தைப்படுத்த ஒரு முயற்சியை மேற்கொண்டு இருக்கின்றோம். மேலும் விற்பனை வியூகம், களத்தில் எப்படி பணியாற்ற வேண்டும் போன்றவற்றைகான இரண்டு நாள் பயிற்சியினை ஏற்பாடு செய்திருக்கின்றோம். அப்பயிற்சி அளிப்பதற்கு துறை சார்ந்த அனுபவம் வாய்ந்த வல்லுநர்கள் வருகை புரிந்துள்ளனர். செயலாளர் அவர்களும், மேலாண்மை இயக்குநர் அவர்களும், நானும் இருந்து இப்பயிற்சியை நடத்துகின்றோம். இந்த பயிற்சி நிச்சயமாக இரண்டு நாளும் ஆவின் விற்பனை குழுவிற்க்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இந்த பயிற்சி முகாமை திட்டமிட்டு ஏற்பாடு செய்திருக்கின்றோம்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைச் செயலாளர் மருத்துவர் ந.சுப்பையன், பால்வளத்துறை ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அ.ஜான் லூயிஸ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் வழக்கறிஞர் உ.விஜயபோஸ் இல்லத் திருமண வரவேற்பு விழாவில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையேற்று மணமக்களை வாழ்த்தினார். அமைச்சர்கள் சா.சி.சிவசங்கர், சிவ.வீ. மெய்யநாதன், மேயர் பிரியா, தயாநிதிமாறன் எம்.பி., என்.ஆர்.இளங்கோ எம்.பி. மற்றும் கழக முன்னணியினர், மாவட்ட பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

## சென்னை கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் – வழக்கறிஞர்

# உ.விஜயபோஸ் இல்லத் திருமண வரவேற்பு! அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில்!

## அமைச்சர்கள் சா.சி.சிவசங்கர் – சிவ.வீ. மெய்யநாதன் – மேயர் பிரியா – தயாநிதிமாறன் எம்.பி.– என்.ஆர்.இளங்கோ எம்.பி. – முன்னணியினர் வாழ்த்தினர்!

சென்னை, டிச. 4-

சென்னை கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் புரசைவாக்கம் வழக்கறிஞர் உ.விஜயபோஸ் - சுலோச்சனா ஆகியோரின் புதல்வி வி.அனிதா மீகாளுக்கும், சென்னை பெரம்பூரைச் சேர்ந்த ஜோசப் தேவகுமாரி - ஜோ.அனிதா ஆகியோரின் புதல்வர் ஜெ.டேவிட் சாலமனுக்கும் திருமண வரவேற்பு விழா (1.12.2025 - திங்கள் கிழமை அன்று இரவு 7 மணியளவில் கீழ்ப்பாக்கம் (சி.எஸ்.ஐ. பெய்ன்ஸ் பள்ளி) கெல்லீஸ் சி.எஸ்.ஐ. லைட்டி அரங்கத்தில் நடைபெற்றது.

இம்மண விழா வரவேற்பில் ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், புரசை ஜி.தாமோதரன், ந. கலையரசன் ஆகியோர் வரவேற்புரையாற்றினர்.

சொ.வேலு, வி.சுதாகர், புனிதவதி எத்திராசன், பரிதி இளம்சுருதி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், எல்.சுந்தர்ராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இம்மணவிழா வரவேற்பில் வட்ட கழக செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார்.

இம்மண விழா வரவேற்பில் போக்குவரத்து (ம) மின்சாரத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சி.வி.மெய்யநாதன், மேயர் பிரியா ராஜன், தயாநிதிமாறன் எம்.பி., என்.ஆர்.இளங்கோவன் எம்.பி., சி.பெர்னாண்டஸ் ரத்தின ராஜா, ப.தயாகம்கவி எம்.எல்.ஏ., அ.வெற்றியழகன் எம்.எல்.ஏ., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ., ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், கே.சந்துரு, தமிழன்பிரசன்னா, பி.கே.மூர்த்தி, கே.எஸ்.எம். நாதன், எம்.விஜயகுமார், பி.ஸ்ரீராமுலு, சரிதா மகேஷ்குமார், கூ.பீ.ஜெயின், வானவில் விஜய், கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.எம்.தேவன், இசட்.ஆசாத், வே.உமாகாந்த், கோ.மணி, க.நந்திஸ்வரன், ஆர்.நிர்மலா தேவி, சாவித்திரி வீரராகவன், தி.வி.செம்மொழி, ஐ.சி.எப். வ.முரளிதரன், எ.நாகராஜன், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜன், எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், எம்.தில்லைகுமார், பி.சி.சம்பத்குமார், ஜெ.கே.கருணாகரன், கே.வள்ளி, ப.சுப்புராயலு, எஸ்.ரசூல், டி.வி.வேலு, எம்.மலர்மாறன், கே.அன்னபுரணி, எஸ்.ஜெகதீசன், வி.அயாய், தி.தயாளன், சு.மனோகரன், ந.பாலு, வி.விஜய குமார், ஆர்.பாபு, இ.மொய்தீன், டாயிர் எஸ்.அரி, வான்மதி, கதிரவன் உள்ளிட்ட பலர் பங்கேற்று வாழ்த்தினர்.

தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட 1 வது மண்டலம், 1 வது வார்டு, அனகாபுத்தூர் பகுதியில் டிட்வா புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அடையார் ஆற்றின் தற்போதைய நீரின் கொள்ளளவை தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், மாநகராட்சி ஆணையாளர் சி.பாலச்சந்தர் மற்றும் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜர் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வின் போது மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



